டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 15.10.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 098 | Madurai | Online Edition

# பிரதமரின் தன தானிய வேளாண் திட்ட தேசிய மாநாடு : மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் பங்கேற்பு

புது தில்லி, அக்.14

புது தில்லி பூசா வளாகத்தில் நடைபெற்ற ’பிரதமரின் தன தானிய வேளாண் திட்ட தேசிய மாநாட்டில், சிறப்பாகச் செயல்பட்ட மாவட்டங்களை மத்திய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் பாராட்டினார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், ‘மக்களின் தேவைக்கேற்பக் கொள்கைகள் வகுக்கப்பட்டு, அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படுவதே பிரதமர் நரேந்திர மோடியின் சிறந்த ஆட்சியின் அடையாளம்‘ என்றார். புது தில்லி அலுவலகங்களில் திட்டங்களை வகுக்காமல், மாவட்ட ஆட்சியர்கள் கள நிலவரத்திற்கு ஏற்ப வேளாண் திட்டங்களை உருவாக்கியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்க நீர்வளம், உணவுப் பதப்படுத்துதல், கூட்டுறவு, மீன்வளம் மற்றும் சிறு, குறு, நடுத்தர தொழில் ஆகிய துறைகளை ஒருங்கிணைத்துச் செயல்பட வேண்டும் என்றும், அறிவியல் ஆராய்ச்சிகள் நேரடியாக விவசாயிகளைச் சென்றடைய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.



# பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி



கடலூர், அக்.14

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலத்தில், திருச்சி துவாக்குடியில் அமைந்துள்ள தமிழ்நாடு பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்தின் சார்பாக அரசு நிதி உதவியுடன், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலத்தில் கடலூர் மாவட்ட விவசாயிகளுக்கான பண்ணை இயந்திர மயமாக்கல் பற்றிய பயிற்சி 14.10.26 அன்று நடைபெற்றது. இப்பயிற்சியை தமிழ்நாடு பாசன மேலாண்மை பயிற்சி நிலையத்தின் உதவிபேராசிரியர். D.கிறிஸ்டல் கோரெட், துவக்கி வைத்து, வரவேற்புரையாற்றினார். வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க. நடராஜன் சிறப்புரையாற்றினார். வேளாண்மை பொறியியல் துறை விருத்தாசலம், உதவி பொறியாளர் னு.அகிலா, நெல், மக்காச் சோளம், கரும்பு, வாழை, நிலக்கடலை, உளுந்து போன் றமுக்கிய பயிர்களில் இயந்திர பயன்பாடுகள் குறித்து விளக்கினார். நு.வாடகை, உழவன் செயலி, DBT போர்டல் குறித்தும் மற்றும் வேளாண் இயந்திரங்கள் வாங்க மானிய உதவி பெறுவது எப்படி என்பதை பற்றி தெளிவாக பொறி G.கவிராஜன், உதவி பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை கடலூர் எடுத்துரைத்தார். மண் பரிசோதனையின் முக்கியத்துவம் பற்றி முனைவர். கமலக்கண்ணன் எடுத்துரைத்தார். வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர், முனைவர் க.நடராஜன், பாசன திட்டத்தின் இயந்திரமயமாக்கல் குறிப்பாக நுண்ணீர் பாசன திட்டங்கள் குறித்து விளக்கினார். பண்ணை இயந்திரங்கள் பாராமரித்தல் குறித்து பொறி. P.வேலன், சர்வீஸ் பொறியாளர், VST டிராக்டஸ் டில்லஸ் விருத்தாசலம், செயல்முறைவிளக்கம் காண்பித்தார். வேளாண் பண்ணைகளில் மழைநீர் சேகரிப்பு தொழில்நுட்பங்கள் மற்றும் இயந்திரங்களின் மானிய விபரங்கள் பற்றி பொறி.அஜிதா, உதவிபொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, விருத்தாசலம் விளக்கமளித்தார். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நத்தத்தில் தோட்டக் கலைத் துறை சார்பில் மா ஏற்றுமதியாளர்களுக்கான பயிற்சி முகாம்



திண்டுக்கல், அக்.14

நத்தத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில் மா ஏற்றுமதியாளர் களுக்கான பயிற்சி முகாம் செவ்வாய் கிழமை நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டம், நத்தத்தில் தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை சார்பில் மா உற்பத்தியாளர்கள் விவசாயிகள் குழுவிற்கான பயிற்சி முகாம் நடந்தது. இதற்கு நத்தம் வட்டார தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை உதவி இயக்குநர் முகமது ஆசிப் தலைமை தாங்கினார். துணை அலுவலர் ஜெகன்னாத் முன்னிலை வகித்தார். இதில் நத்தம் பகுதியில் உள்ள மா உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதி யாளர்கள் உழவர் குழு உறுப்பினர்களுக்கு TNAPEX (தமிழ் நாட்டின் உணவு பதப்படுத்தும் தொழில்களை உலகமய மாக்குதல்) உடன் இணைந்து உலகளாவிய நன்னெறி வேளாண் முறைகள், சான்றிதழ் தொடர்பான பயிற்சி அளிக்கப் பட்டது. இதில் நத்தம் வட்டார அளவிலான மா உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் உழவர் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**






அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

## சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# குடவாசல் தொடக்கப் பள்ளியில் சர்வதேச பெண் குழந்தைகள் தின விழிப்புணர்வு நிகழ்ச்சி!

நாகப்பட்டிணம், அக்.14

வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள், கிராமப்புற வேளாண் பயிற்சித் திட்டத்தின் கீழ் இரண்டு மாதங்கள் குடவாசல் பகுதியில் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, குடவாசல் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.



சர்வதேச பெண் குழந்தைகள் தினம் அக்டோபர் 11ஆம் தேதி கடைப்பிடிக்கப்படுவதால், ஞாயிற்றுக்கிழமை விடுமுறையைத் தொடர்ந்து அக்டோபர் 12ஆம் தேதி இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. நிகழ்ச்சிக்குப் பள்ளித் தலைமை ஆசிரியர் இராஜேஸ்வரி தலைமை தாங்கினார். இடைநிலை ஆசிரியர் திரிபுரா சுந்தரி நிகழ்ச்சி சிறப்பாக நடைபெறத் துணை நின்றார்.

நிகழ்ச்சியில் பெண் குழந்தைகளின் கல்வி, உரிமைகள், பாதுகாப்பு, சமத்துவம் மற்றும் தன்னம்பிக்கையின் முக்கியத் துவம் குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும், குழந்தை களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நல்ல தொடுதல் (Good Touch) மற்றும் தவறான தொடுதல் (Bad Touch) குறித்த விழிப்புணர்வு வழங்கப்பட்டது. குழந்தைகள் தங்களது உடல் பாது காப்பைப் பற்றித் தெரிந்து கொள்வதன் அவசியம், பாதுகாப்பற்ற தாக உணரப்படும் செயல்களை அடையாளம் காண்பது, அத்தகைய சூழலில் நம்பிக்கைக்குரிய பெரியவர்களிடம் தெரிவிப்பது மற்றும் தங்களது உடல் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வது குறித்து எளிய முறையில் விளக்கப்பட்டது. தொடர்ந்து, மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் வகையில் வினாடி வினா போட்டி

நடத்தப்பட்டது. இதில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். போட்டியில் சிறப்பாகப் பதிலளித்த மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப் பட்டன. இதன் மூலம் மாணவர்களிடையே கற்றல் ஆர்வமும் தன்னம்பிக்கையும் ஊக்குவிக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியின் மூலம் பெண் குழந்தைகளின் உரிமைகள், குழந்தைகள் பாதுகாப்பு, பாலின சமத்துவம் மற்றும் கல்வியின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. கிராமப்புற வேளாண் பயிற்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக, பள்ளி மாணவர் களிடையே சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த வேளாண்மைக் கல்லூரி மாணவர்கள் மேற்கொண்ட இம்முயற்சி பயனுள்ளதாக அமைந்தது.

# நீடாமங்கலம் விதைக் கிடங்கிற்கு RAWE வேளாண் மாணவர்களின் களப்பயணம்

திருவாரூர், அக்.14

Rural Agricultural Work Experience (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக, வேளாண் மாணவர்கள் நீடாமங்கலத்தில் செயல்பட்டு வரும் விதைக் கிடங்கை (Seed Godown) நேரில் பார்வையிட்டு, அங்கு மேற்கொள்ளப்படும் விதை சேமிப்பு, விநியோகம் மற்றும் விற்பனை தொடர்பான நடைமுறை செயல்பாடுகளைப் பற்றி விரிவாக அறிந்து கொண்டனர்.

பார்வையின்போது, விதைக் கிடங்கு அலுவலர்கள் மற்றும் பணியாளர்களிடம் மாணவர்கள் அப்பகுதியில் விவசாயிகளால் பயன்படுத்தப்படும் முக்கியமான பயிர்கள் மற்றும் அவற்றிற்கான பரிந்துரைக்கப்படும் விதை ரகங்கள் குறித்து கேட்டறிந்தனர். குறிப்பாக நெல், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்கள் தொடர்பான விதை ரகங்கள், பயிர் பருவங்கள் மற்றும் விதைத் தேர்வு முறைகள் குறித்து விளக்கம் பெறப்பட்டது.

நெல் பயிரைப் பொறுத்தவரை, குறுகிய கால ரகங்கள் கோடை/ குறுகிய காலப் பருவங்களில் அதிகம் பயன்படுத்தப்படுவதாகவும், ADT 59 (110–115 நாட்கள்), ADT 57, ADT 51, ASD 21 மற்றும் ASD 16 போன்ற ரகங்கள் விவசாயிகளிடையே பயன்பாட்டில் உள்ள தாகவும் மாணவர்கள் அறிந்து கொண்டனர். மேலும், சம்பா மற்றும் தாளடி பருவங்களில் நீண்டகால ரகங்களான CR 1009 மற்றும் ADT 51 ஆகியவை பயன்படுத்தப்படுவதையும், நீர் கிடைக்கும் சூழ்நிலைக்கு ஏற்ப குறுகிய மற்றும் நடுத்தர கால ரகங்களைத் தேர்வு செய்வதையும் அறிந்தனர்.

நடப்பு ஆண்டில் விநியோகிக்கப்படும் நடுத்தர கால நெல் ரகங்களில் ADT 58, WGL 739 மற்றும் WGL 697 ஆகியவை நல்ல மகசூல் மற்றும் விவசாயிகளின் வரவேற்பைப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மேலும் Sornasapon, BPT, IR 20 மற்றும் சில JGL ரகங்களும் விவசாயிகளால் பயன்படுத்தப்படுவதாகக் கூறப் பட்டது. பாரம்பரியமான CR 1009, ASD தொடர் மற்றும் TPS போன்ற ரகங்களும் உள்ளூர் விவசாயிகளின் விருப்பத்திற்கேற்ப தொடர்ந்து பயிரிடப்படுகின்றன.




பயறு வகைகளில், உளுந்து (Black gram) முக்கியமான பயிராக இருப்பதாகவும், முன்பு ADT 5 அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட நிலையில் தற்போது VBN 8, VBN 10 மற்றும் VBN 11 போன்ற ரகங்கள் பரவலாக ஊக்குவிக்கப்படுவதாகவும் மாணவர்கள் அறிந்து கொண்டனர். குறிப்பாக VBN 10 மஞ்சள் தேமல் நோய்க்கு (Yellow Mosaic) சிறந்த எதிர்ப்புத் திறன் கொண்டதாகக் குறிப்பிடப் பட்டது.

மேலும், விதைகளின் தரம் மற்றும் விலை நிர்ணயம் குறித்தும் மாணவர்கள் தகவல்களைப் பெற்றனர். Foundation Seed (FS) மற்றும் Certified Seed (CS) ஆகியவற்றின் விலைகள் விதையின் தரத்தைப் பொறுத்து நிர்ணயிக்கப்படுகின்றன. Improved White Ponni, Super-fine, Fine & Medium மற்றும் Coarse போன்ற தரப் பிரிவுகளுக்கு ஏற்ப கொள்முதல் மற்றும் விற்பனை விலைகளில் வேறுபாடு இருப்பதையும் மாணவர்கள் தெரிந்து கொண்டனர். பாரம்பரிய ரகங்களுக்குக் கூடுதல் கொள்முதல் மற்றும் விற்பனை விலை வழங்கப்படுவதாகவும் விளக்கப்பட்டது.

இந்த RAWE களப்பயணம், விதை உற்பத்தி முதல் சேமிப்பு, தரப்படுத்தல், சான்றளிப்பு, விலை நிர்ணயம் மற்றும் விவசாயி களுக்கு விநியோகம் செய்யப்படும் வரையிலான செயல்முறை களை நேரடியாகப் புரிந்துகொள்ள மாணவர்களுக்கு பயனுள்ள தாக அமைந்தது. மேலும், விவசாயிகளின் தேவைக்கேற்ப தரமான விதைகளை சரியான பருவத்தில் கிடைக்கச் செய்வதில் விதைக் கிடங்குகளின் முக்கியத்துவத்தையும் மாணவர்கள் நடைமுறை அனுபவத்தின் மூலம் அறிந்து கொண்டனர்.

Rithvik Pipe

IS 4985 : 2021 IS 9537

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# உயிரற்ற மண்ணா? இறுகிப்போன மண்ணை மீண்டும் வளமாக்குவது எப்படி?




மண்ணின் உயிர் குறையும் போது பயிர்களின் வளர்ச்சியும் குறைகிறது! மண்ணைத் தொட்டுப் பார்த்தால் கடினமாக இருப்பது, மழை நீர் மண்ணுக்குள் இறங்காமல் ஓடுவது, வேர்கள் ஆழமாகச் செல்ல முடியாமல் இருப்பது போன்ற அறிகுறிகள் உங்கள் வயலில் தென்படுகின்றனவா? இவை மண் இறுக்கத்தின் (Soil Compaction) அறிகுறிகளாக இருக்கலாம். ஆனால் சரியான மேலாண்மை மூலம் மண்ணின் ஆரோக்கியத்தை மீண்டும் மேம்படுத்த முடியும்.

## 1. மண் ஏன் இறுகிப்போகிறது?

மண் இறுக்கம் என்பது மண் துகள்களுக்கு இடையிலுள்ள பெரிய துளைகள் குறைந்து, காற்று மற்றும் நீர் செல்லும் பாதைகள் தடைபடும் நிலையாகும்.

### முக்கிய காரணங்கள்

**கனரக இயந்திரங்களின் பயன்பாடு :** டிராக்டர் மற்றும் அறுவடை இயந்திரங்களின் எடை மண்ணை அழுத்துகிறது.

**ஈரமான மண்ணில் உழுதல் :** அதிக ஈரப்பதம் உள்ள நிலையில் இயந்திரங்களை இயக்கும் போது மண் துகள்கள் இறுக்கமாகின்றன.

**கரிமப் பொருள் குறைதல் :** தொழுஉரம், பயிர்க்கழிவுகள் போன்றவை குறைவாகச் சேர்க்கப்படுவதால் மண் திரளமைப்பு பாதிக்கப்படலாம்.

**தொடர்ச்சியான ஒரே ஆழ உழவு :** குறிப்பிட்ட ஆழத்தில் கடினமான உழவுப் படலம் (Plough Pan) உருவாகலாம்.

**சோடியம் அதிகமுள்ள மண் :** சோடியம் மண் துகள்களின் திரளமைப்பைச் சிதைத்து, மேல்மண் இறுக்கம் மற்றும் நீர் ஊடுருவல் குறைவை ஏற்படுத்தலாம்.

**2. மண் இறுக்கத்தால் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்**

மண்ணில் உள்ள துளைகள் குறையும்போது வேர்களுக்கு ஆக்சிஜன் கிடைப்பது குறைகிறது.

**இதனால் :**

வேர்கள் ஆழமாகச் செல்ல முடியாமல் போகின்றன. மழைநீர் மண்ணுக்குள் ஊடுருவுவது குறைந்து, மேற்பரப்பு நீரோட்டம் அதிகரிக்கிறது. வறட்சிக் காலத்தில் பயிர்களுக்கு நீர் கிடைப்பது பாதிக்கப்படலாம். நன்மை பயக்கும் மண் நுண்ணுயிர்களின் செயல்பாடுகள் பாதிக்கப்படலாம். உரமிட்டாலும் வேர்கள் ஊட்டச் சத்துகளை உறிஞ்சும் திறன் குறையலாம். பயிர் வளர்ச்சி, மகசூல் மற்றும் மண்ணின் நீண்டகால உற்பத்தித்திறன் குறையலாம்.

**முக்கியமாக நினைவில் கொள்ள வேண்டியது :**

மண் கடினமாக இருப்பதாலேயே அது உயிரற்ற மண் என்று முடிவு செய்ய முடியாது. மண் இறுக்கம், கரிமக் கார்பன் குறைவு, உப்புத்தன்மை மற்றும் உயிரியல் செயல்பாடு குறைதல் ஆகியவை வெவ்வேறு பிரச்சினைகள், இவை ஒன்றாகவும் ஏற்படலாம்.

**3. இறுகிப்போன மண்ணை மீண்டும் வளமாக்கும் வழிகள்**

**1. கரிமப் பொருளை அதிகரிக்கவும்**

நன்கு மக்கிய தொழுஉரம், தரமான கம்போஸ்ட் மற்றும் பயிர்க்கழிவுகளை மண்ணில் சேர்க்கவும். இவை மண் திரளமைப்பையும் நீர்ப்பிடிப்புத் திறனையும் மேம்படுத்த உதவும். பயிர்க்கழிவுகளை எரிப்பதைத் தவிர்த்து, பாதுகாப்பான முறையில் மறுசுழற்சி செய்யவும்.

**2. பசுந்தாள் உரம் மற்றும் மூடாக்குப் பயிர்களைப் பயிரிடவும்**

சணப்பை (Sunn hemp), தக்கைப்பூண்டு (Dhaincha) போன்ற பொருத்தமான பசுந்தாள் உரப் பயிர்கள் மற்றும் ஆழமாக வேர்விடும் மூடாக்குப் பயிர்கள் மண் அமைப்பை மேம்படுத்த உதவுகின்றன. பயிர் மற்றும் மண் நிலைக்கு ஏற்ப தேர்வு செய்ய வேண்டும்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்

### 3. கடினமான உழவுப் படலத்தைச் சரி செய்யவும்

குறிப்பிட்ட ஆழத்தில் கடினமான படலம் இருப்பது உறுதியானால், சரியான ஈர நிலையில் உளிக்கலப்பை (Chisel plough) அல்லது சப்-சாய்லர் (Subsoiler) பயன்படுத்தலாம். எல்லா வயல்களிலும் ஆழ உழவு தேவையில்லை, காரணமின்றி அடிக்கடி ஆழ உழுவது செலவையும் மண் சீர்குலைவையும் அதிகரிக்கலாம்.

### 4. மூடாக்கு அமைக்கவும்

வைக்கோல், இலைகள் மற்றும் பொருத்தமான பயிர்க்கழிவுகளை மண்ணின் மேற்பரப்பில் பரப்பவும். இது மழைத்துளிகளின் நேரடி தாக்கத்தைக் குறைத்து, மண் ஈரப்பதத்தைப் பாதுகாத்து, மேல்மண் இறுக்கம் ஏற்படுவதைத் தடுக்க உதவும்.

### 5. மண் உயிரினங்களைப் பாதுகாக்கவும்

மண்புழுக்கள், நன்மை பயக்கும் பூஞ்சைகள் மற்றும் பாக்டீரியாக்கள் மண் சுழற்சி, கரிமப் பொருள் சிதைவு மற்றும் ஊட்டச் சத்துச் சுழற்சியில் பங்காற்றுகின்றன. கரிமப் பொருள் சேர்த்தல், மண் ஈரப்பதத்தைப் பராமரித்தல் மற்றும் தேவையற்ற மண் குலைவைக் குறைத்தல் ஆகியவை இவற்றுக்கு ஏற்ற சூழலை உருவாக்குகின்றன.

### 6. நீர்ப்பாசனத்தையும் இயந்திரப் பயன்பாட்டையும் சீரமைக்கவும்

தேவைக்கேற்ப நீர்ப்பாசனம் செய்யவும். வயலில் நீர் தேங்குவதைத் தடுக்கவும். மண் அதிக ஈரமாக இருக்கும்போது கனரக இயந்திரங்களை இயக்குவதைத் தவிர்க்கவும். இயன்றவரை நிரந்தர இயந்திரப் பாதைகளைப் பயன்படுத்துவது வயல் முழுவதும் மண் இறுக்கம் ஏற்படுவதைக் குறைக்க உதவும்.

### 4. மண்ணின் பிரச்சினைக்கு ஏற்ப தீர்வு மாறும்!

**மண் இறுக்கம் :** வேர்கள் ஆழமாகச் செல்லவில்லை. மண் அடுக்கை ஆய்வு செய்து, தேவையான இடத்தில் உளிக்கலப்பை பயன்படுத்துதல்

**கரிமக் கார்பன் குறைவு :** மக்கிய தொழுஉரம், கம்போஸ்ட், பயிர்க்கழிவுகள் சேர்த்தல்

**மழைநீர் மண்ணுக்குள் இறங்கவில்லை :** மண் திரளமைப்பு, மேற்பரப்பு மேலாண்மை, வடிகால் நிலை ஆகியவற்றை ஆய்வு செய்தல்

**சோடியம் அதிகம் ;** மண் பரவலாக இறுகுகிறது. மண் மற்றும் நீர் பரிசோதனை செய்து, தேவைக்கேற்ப ஜிப்சம் மற்றும் வடிகால் மேலாண்மை செய்தல்

நீர் தேக்கம் : வேர்கள் பாதிப்பு. நில அமைப்புக்கு ஏற்ற வடிகால் வசதி ஏற்படுத்துதல்

குறிப்பு : ஜிப்சம் எல்லா வகையான இறுகிய மண்ணுக்கும் தீர்வல்ல. குறிப்பாக சோடியம் சார்ந்த மண் பிரச்சினைகளில் மட்டுமே, பரிசோதனை மற்றும் தேவைக் கணக்கீட்டின் அடிப் படையில் பயன்படுத்த வேண்டும்.

மண்ணை இறுக்குவது இயந்திரத்தின் அழுத்தம்; மண்ணை மீட்டெடுப்பது அறிவார்ந்த மேலாண்மை!

தகவல் : *குளோரி.கே.எஸ் & சி.பிரசாத், உதவி பேராசிரியர்கள் (மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை), கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி, உசிலம்பட்டி.*



# பால் உற்பத்தியை அதிகரிக்க உதவும் அசோலா உற்பத்தி



கடுமையான வெப்பமான சூழ்நிலையில் கால்நடைகளுக்கு போதுமான மேய்ச்சல் நிலங்கள், புல் பூண்டு இன்றி வறண்டு கிடக்கின்றன. பசுந்தீவன உற்பத்தியும் தேவையை விட குறைவாக உள்ளதால் கால்நடைகளில் பால் உற்பத்தி குறை கின்றன. மேலும் அடர் தீவனங்களின் விலையும் அதிகரித்த நிலையில், எளிய முறையில் தயாரிக்க கூடிய அசோலா (AZOLLA) உற்பத்தி செய்து பால் மாடுகளுக்கு வழங்குவதால் கூடுதலான பால் உற்பத்தியாகும்.

**அசோலா என்றால் என்ன?**

அசோலா என்பது நீரில் மிதந்து வளரும் ஒரு சிறிய வகை பெரணி (FLOATING WATER FERN) இது பார்ப்பதற்கு முக்குத்தி/ கம்மல் செடிபோல இருப்பதால் இதற்கு மூக்குத்தி பாசி என்ற பெயரும் உள்ளது. இதனுடைய இலைகளுக்குள் அனாபினா (ANABAENA) என்ற BGA கூட்டு வாழ்வு முறையில் வாழ்ந்து காற்றில் உள்ள தழைசத்தை (NITROGEN) உறிஞ்சி நெல் பயிருக்கு அளிக்கிறது. அதுமட்டுமல்ல சிறந்த கால்நடை தீவனமாக (மாடு, கோழி களுக்கு) பயன்படுத்தப்படுகிறது.

**அசோலாவில் உள்ள சத்துகள் என்னென்ன?**

அசோலாவில் 25% முதல் 30% வரை புரத சத்து உள்ளது. அதுமட்டுமா. சில அத்தியாவசிய அமினோ அமிலங்கள், வைட்டமின்கள் A, B 12 மற்றும் கால்சியம் பாஸ்பரஸ் தாது உப்புகளும் நிறைந்த உள்ளன. இதில் உள்ள நார்சத்து (LIGNIN) கால்நடைகளுக்கு தீங்கான டானின் என்ற நச்சுத் தன்மையும் மிக குறைவாக இருப்பதால் கால்நடைகளுக்கு எளிதாக ஜீரணமாகிறது. அசோலாவில் 4.5% தழைசத்து உள்ளது. நெல் வயலுக்கு ஏக்கருக்கு 200 கிலோ இட்டால் 10 முதல் 15% மகசூல் அதிகரிக்கும். புரத சத்து மிகுந்த அசோலாவை மாடுகள், கோழிகளுக்கு இட்டால் கூடுதலான பால், முட்டை உற்பத்தி அதிகரிக்கும்.

**அசோலா எவ்வாறு உற்பத்தி செய்யலாம்?**

விவசாயிகள் அவரவர் தோட்டங்களில் எளிதாக குறைந்த செலவில் அதிக உழைப்பின்றி எளிதாக தயாரிக்கலாம். 10 அடி நீளம், 2 அடி அகலம், 1 அடி ஆழம் கொண்ட சிமெண்ட் தொட்டிகள், சில்பாலின் பைகள் ( 6 X 4 அடி) SILPALIN BAGயில் 25 முதல் 30 கிலோ மண்ணை பரப்பி, அதனுடன் 5 கிலோ மக்கிய சாணத்தை கலக்கி விட வேண்டும். பின் சூப்பர் பாஸ்பேட் 300 கிராம்/போர்வெல் எம் சாண்ட்) கலந்து விட வேண்டும். 5 கிலோ அசோலா விதை வித்தை இட்டால் இரண்டு வாரங்களில் 35-45 கிலோ அசோலா உற்பத்தியாகி அறுவடை செய்யலாம். 5 செ.மீ நீர் அளவு இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஒரு கிலோ அசோலாவை உற்பத்தி செய்ய வெறும் 75 பைசா மட்டுமே செலவாகும். இதை கறவை பால் மாடுகளுக்கு வழங்குவதால் பால் உற்பத்தி 15% முதல் 20% வரை அதிகரிக்கும். முதலில் மாடுகள் இதை சாப்பிட மறுக்கும். நல்ல தண்ணீரில் நன்றாக கழுவிய பின்னர் அதனுடன் சர்க்கரை கலந்து கொடுத்தால் மாடுகள் விரும்பி சாப்பிடும். அசோலா நாமே உற்பத்தி செய்து வழங்குவதால் கணிசமாக தீவனச் செலவும் குறையும்.

**கறவை மாடுகளுக்கு எவ்வளவு கொடுக்கலாம்?**

கறவை மாடுகளுக்கு தினமும் அசோலா 500 கிராம் முதல் 1 கிலோ வரை ஆரம்பத்தில் வழக்கமான தீவனத்துடன் கலந்து கொடுக்கலாம். இரண்டு வாரங்களுக்கு பிறகு அளவை அதிகரிக்கலாம் அதாவது 1.5 கிலோ முதல் 2 கிலோவாக அதிகரிக்கலாம். இதனால் பால் உற்பத்தியும் பாலில் கொழுப்பு சத்தும் (FAT & SNF) அதிகரிக்கும்.

**என்ன அசோலா வளர்க்க ரெடியா?**

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# சிறுவயலூர் கிராமத்தில் வேளாண்மைக் கல்லூரி மாணவிகளின் கிராமப்புறப் பயிற்சி தொடக்க விழா

பெரம்பலூர், அக்.14

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரம், சிறுவயலூர் கிராமத்தில் நாளந்தா வேளாண்மைக் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவிகள் சார்பில், கிராமத்தில் தங்கிப் பயிற்சி பெறும் திட்டத்தின் (RAWE) தொடக்க விழா சிறப்பாக நடைபெற்றது.




இவ்விழாவை நான்காம் ஆண்டு மாணவிகள் வ.அபிதா, செ.தேவதர்ஷினி, ச.தனலெட்சுமி, ச.ஹரிணி, ஜா.செ.ஹெலீனா ஜாண், சே.ஜெயஸ்ரீ, ர.பி.காவியா, ச.சுபிக்ஷா, வி.வித்யா மற்றும் ப.யுவராணி ஆகியோர் ஒருங்கிணைத்து நடத்தினர்.

இப்பயிற்சியானது நாளந்தா வேளாண்மைக் கல்லூரி முதல்வர் முனைவர் ஜெ.வெங்கடபிரபுவின் வழிகாட்டுதலிலும், பாட ஆசிரியரும் வேளாண் விரிவாக்கத் துறை முதுநிலை உதவிப் பேராசிரியருமான ம.மோகன்ராஜின் மேற்பார்வையில், குழு ஒருங்கிணைப்பாளர்களான முதுநிலை உதவிப் பேராசிரியர் ம.வெங்கடேஷ் மற்றும் உதவிப் பேராசிரியர் ச.பூர்ணிமா ஆகியோர் ஆலோசனையிலும் நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் மாணவிகள் கிராமத்தில் தங்கி, விவசாயி களின் சாகுபடி முறைகள், பாரம்பரிய வேளாண் தொழில் நுட்பங்கள் மற்றும் வேளாண் சார்ந்த நடைமுறை அனுபவங் களை நேரடியாக அறிந்து கொள்ள உள்ளனர்.

மேலும், நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மற்றும் நிலையான வேளாண்மை குறித்த விழிப்புணர்வையும் விவசாயிகளிடையே ஏற்படுத்த திட்டமிட்டு உள்ளனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# அதிக மகசூல் பெற தரமான விதைகளை தேர்ந்தெடுப்பீர்!

விவசாயத்தில் முக்கிய பங்கு வகிக்கும் இடுபொருள் விதை. தரமான விதைகளை விதைப்பதன் மூலமே அதிக மகசூல் பெற முடியும். தரமான விதை என்பது விதைச்சான்று துறையினரால் பல கட்டங்களில் வயல் மட்ட ஆய்வு மற்றும் விதைப் பரிசோதனை செய்யப்பட்ட சான்று விதைகளே ஆகும். விதைப் பரிசோதனை நிலையத்தில் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத் திறன், பிறரக கலப்பு என்று 4 விதமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முளைப்புத்திறன் பரிசோதனையில் விதை மாதிரிகளின் முளைப்புத்திறன் பரிசோதிக்கப்படுகின்றன. ஒவ்வொரு விதை மாதிரிக்கும் இயல்பான நாற்றுகள், இயல்பற்றவை கடின விதைகள் மற்றும் உயிரற்ற விதைகள் போன்றவை கண்டறியப் பட்டு முளைப்புத்திறன் நிர்ணயிக்கப்படுகிறது. முளைப்புத்திறன் குறைந்தால் பயிர் எண்ணிக்கை குறைந்து மகசூல் பாதிக்கும்.

வலுவற்ற நாற்றுகள் அல்லது வலுவற்ற பயிர்களை கண்டறிந்து தரமான விதையினை உறுதி செய்து இடுபொருள் செலவினை குறைத்து அதிக மகசூல் பெற விதை பரிசோதனை அவசியமாகும். வலுவற்ற நாற்றுகள் மீண்டும் வளருமா? மற்ற நல்ல நாற்றுக்களை போன்ற பலன் தருமா? என்ற ஐயம் அனைவரிடமும் உள்ளது. ஆனால் இந்த வலுவற்ற நாற்றுகள் இயல்பான நாற்றுகளைப் போல வளர்ந்து பயன் தர முடியாது. ஏனெனில் இயல்பான வளர்ச்சியை தரக்கூடிய முக்கிய பாகங்களான வேர், தண்டு அல்லது வளர்நுனி இவற்றில் ஏதேனும் ஒன்றில் பழுது, குறைபாடு, முழு வளர்ச்சியின்மை, வேர், தண்டு மற்றும் வளர்ச்சிக்கான முக்கியமான சில பகுதிகள் இல்லாமல் போவதன் காரணமாக நாற்றுகளின் வளர்ச்சி தடைபடுகிறது.

விதையுறைகள் பழுது, நாற்றுகளின் மேல் பகுதி அல்லது நாற்று முழுவதிலும் உள்ள குழிகள், பிளவுகள், வெடிப்புகள், பூச்சி தாக்குதலுக்குள்ளாவதால் ஏற்படும் காயங்கள், வித்திலைகள் மற்றும் நுனிமொட்டு பாதிப்படைதல் நாற்றுகளின் முக்கிய பாகங்

களான வேர், தண்டு, நுனிமொட்டு ஆகியவை வலுவற்றும், சரியான நீள் விகிதத்தில் இல்லாமல் இருத்தல், வேர் நன்றாக வளர்ந்து தண்டு பகுதி வளர்ச்சி குறைந்தும் காணப்படுதல், முதல் நிலை அல்லது இரண்டாம் நிலை வேர் வளர்ச்சி குறைந்து காணப்படுதல் போன்றவை வலுவற்ற நாற்றுகள் என அழைக்கப்படுகிறது. வலுவற்ற நாற்றுகள் உருவாக சில காரணங்கள் உள்ளன.

முதிர்ச்சியற்ற விதைகளை விதைப்புக்கு பயன்படுத்துதல் முறையாக விதைகளை சேமித்து பயன்படுத்தாமை, விதையினை சேமிக்கும் போது அல்லது பயன்படுத்தும் போதோ முக்கிய பாகங்களான விதையின் கரு உணவு முதலியன பாதிக்கப்படுவதாலும், விதையானது பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு ஆளாவதாலும், இயந்திரங்களை பயன்படுத்தி விதைகளை அறுவடை செய்தல், தூற்றுதல், தூய்மைப் படுத்துதல், விதைகளை ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்கு கொண்டு செல்லும் போது வெப்பநிலை அதிகரிப்பதாலும், பூச்சி நோய் தாக்கத்திற்கு உள்ளாகும் விதைகளை பூச்சிக் கொல்லி மருந்துகளைக் கொண்டு அழிக்கும் போதும் இது போன்று விதைகள் பாதிப்படைந்து வலுவற்ற நாற்றுக்களை உருவாக்குகிறது.

எனவே, கரூர் மாவட்ட விவசாயிகள் அதிக மகசூல் பெற்று லாபம் பெறவும் விதை இடுபொருள் செலவினைக் குறைக்கவும், தங்களிடம் உள்ள விதைகளை கரூர் காந்தி கிராமம், திண்ணப்பா நகர் முதல் குறுக்குத் தெருவில் உள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80 ஆய்வுக் கட்டணமாக செலுத்தி விதை பரிசோதனை செய்து வலுவான மற்றும் வலுவற்ற விதைகள், உயிரற்ற விதைகள் எவ்வளவு உள்ளது என அறிந்து விதைக்கவும், அறுவடை செய்த விதையினை அடுத்த விதைப்புக்கு சேமிக்கும் பட்சத்தில் உரிய முறையில் சேதமில்லாமல் அறுவடை செய்து, விதையின் ஈரப்பதம் அறிந்து கொண்டு, விதைகள் பூச்சி நோய் தாக்கு தலுக்கு உள்ளாகாமல் சேமிக்குமாறு கரூர் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண் அலுவலர் க.ரமேஷ் குமார் தெரிவித்து உள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# எல்நினோ விழிப்புணர்வு மற்றும் மண் மாதிரி சேகரிப்பு குறித்த வேளாண் நிகழ்ச்சி!

புதுக்கோட்டை, அக்.14

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலத்தில் எல்நினோ (El Niño) நிகழ்வின் தாக்கங்கள் மற்றும் மண் மாதிரி சேகரிப்பின் முக்கியத்துவம் குறித்து கிராமப்புற மக்களுக்கும் விவசாயிகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. காரைக்குடி சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவர்கள், ஊரக வேளாண் அனுபவப் பயிற்சியின் ஒரு பகுதியாக இந்நிகழ்ச்சியை நடத்தினர்.

### எல்நினோ குறித்த விழிப்புணர்வு

இந்நிகழ்ச்சியில், எல்நினோ என்றால் என்ன, அது எவ்வாறு உருவாகிறது, இந்தியப் பருவமழையில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் மற்றும் விவசாயத்தில்ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்து பொதுமக்களுக்கு எளிய முறையில் விளக்கப்பட்டது. மழைப்பொழிவு குறைதல், வறட்சி, நீர்ப் பற்றாக்குறை மற்றும் பயிர் வளர்ச்சியில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும், மழைநீர் சேகரிப்பு, நீர் சிக்கனப் பாசனம், மண்ணின் ஈரப்பதத்தைப் பாதுகாத்தல் மற்றும் வானிலை முன்னறிவிப்புகளின் அடிப்படையில் சாகுபடித் திட்டமிடுதல் போன்ற வறட்சி மேலாண்மை நடவடிக்கைகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

### மண் மாதிரி சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு

தொடர்ந்து, மண்ணின் வளத்தை அறிந்து கொள்ளவும், உரங்களைச் சரியான அளவில் பயன்படுத்தவும் மண் பரிசோதனையின் அவசியம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது. வயலில் பல்வேறு இடங்களில் மண் மாதிரிகளைச் சரியான முறையில் சேகரித்தல், அவற்றைக் கலந்து பிரதிநிதித்துவ மண் மாதிரியைத் தயாரித்தல், மாதிரிகளைச் சுத்தமான பைகளில் சேகரித்தல் மற்றும் பயிர், நில விவரங்கள் உள்ளிட்ட தகவல்களுடன் முறையாகப் பெயரிடுதல் போன்ற நடைமுறைகள் எடுத்துரைக்கப்பட்டன.

மண் பரிசோதனையின் மூலம் மண்ணின் pH, மின் கடத்துத் திறன் (EC) மற்றும் தழை, மணி, சாம்பல் சத்துகளின் (NPK)

நிலையை அறிந்து கொள்ள முடியும் என்றும், பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைத்து மண் வளத்தைப் பாதுகாக்க முடியும் என்றும் விளக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் மூலம், காலநிலை மாற்றங்களால் விவசாயத்தில் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்ளவும், அறிவியல் முறையில் மண் பரிசோதனை செய்து நிலையான வேளாண்மையைப் பின்பற்றவும் கிராமப்புற மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.




# விவசாயிகளுக்கான டிராக்டர் மற்றும் வேளாண் இயந்திரங்களில் ஏற்படும் விபத்துகள் குறித்த தேசிய விழிப்புணர்வு கூட்டம்



ஈரோடு, அக்.14

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், வேளாண்மை பொறியில் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் பண்ணை இயந்திரவியல் மற்றும் சக்திப் பொறியியல் துறையின் கீழ் இயங்கும் அனைத்து இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சி திட்டத்தின் மூலம் மைராடா வேளாண் அறிவியல் மையத்துடன் இணைந்து, ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், இச்சிப்பாளையம் கிராமத்தில் 14.10.26 அன்று டிராக்டர் மற்றும் வேளாண் இயந்திரங்களில் ஏற்படும் விபத்துகள் குறித்த தேசிய விழிப்புணர்வு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் விவசாயிகள் பண்ணை இயந்திரங்களை இயக்கும் பொழுது கையாள வேண்டிய நடைமுறைகள் மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் விவசாயிகள் தங்கள் சந்தேகங்களை தெளிவு பெற பண்ணை இயந்திரவியல் துறை சார்ந்த பேராசிரியர்கள் மற்றும் மைராடா வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கொடுமுடி வட்டார விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தனர்.

இந்நிகழ்ச்சியில், ஈரோடு, கொடுமுடி, சென்னிமலை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் பண்ணை இயந்திர ஓட்டுனர்கள் கலந்து கொண்டனர். மேலும், இந்நிகழ்ச்சியில், பண்ணை இயந்திரவியல் துறை இணைப் பேராசிரியர் டாக்டர் இர.தியாகராஜன் மற்றும் உதவிப்பேராசிரியர் டாக்டர் ச.தம்பிதுரை, மைராடா வேளாண்மை அறிவியல் நிலைய வேளாண்மை துறை சார் வல்லுநர் ஜான் பிரபாகர் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியின் முக்கிய நிகழ்வாக விவசாய டிராக்டர்கள், டிரெய்லர்கள் மற்றும் மெதுவாகச் செல்லும் வாகனங்களின் பின்புறத்தில் ஒட்டப்படும் பிரதிபலிப்புத் திறன் கொண்ட எச்சரிக்கைச் சின்னம் டிராக்டர் உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுனர்களுக்கு வழங்கப்பட்டது.

விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பண்ணை இயந்திரவியல் மற்றும் சக்திப் பொறியியல் துறைப் பேராசிரியர்கள் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானிகள் சரியான முறையில் விளக்கம் அளித்தனர். மேலும், வேளாண்மையில் பண்ணை இயந்திரமாக்கல் மற்றும் மஞ்சள் மற்றும் மரவள்ளி சாகுபடியில் இயந்திரமயமாக்கல் தொடர்பான தொழில் நுட்பங்கள் குறித்த கேள்விகளுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டது.

# கிராம வரைபடம் தயாரித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

நாகப்பட்டினம், அக்.14

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த வேளாண் மாணவர்கள், கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் நடைபெற்ற கிராம வரைபடம் தயாரிக்கும் நிகழ்வில் பங்கேற்றனர்.




இந்நிகழ்வில், கிராம மக்கள் மற்றும் உள்ளூர் பிரதிநிதிகளுடன் இணைந்து மாணவர்கள் கிராம வரைபடச் செயல்பாட்டில் பங்கேற்றனர்.

இந்நிகழ்வு, மாணவர்களுக்கு கிராமப்புறச் சூழலைப் புரிந்துகொள்வதற்கும், கிராம மக்களுடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்தது.

RAWE திட்டத்தின் ஒரு பகுதியாக நடைபெற்ற இந்நிகழ்வில் வேளாண் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

# இப்கோ நானோ விழிப்புணர்வு முகாம்

சென்னை, அக்.14

பெங்களூரில் உள்ள எஸ்கார்ட் பயிற்சி மற்றும் மேம்பாட்டு மையத்தில் (Escort Training & Development Centre), பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளுக்கான (FPOs) திறன் மேம்பாட்டுப் பயிற்சி முகாம் நடைபெற்றது.



இப்பயிற்சியில் பங்கேற்ற உழவர் உற்பத்தியாளர் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு, இப்கோ கள அலுவலர் சேக் அப்துல்லா, இப்கோவின் நானோ உரங்களான நானோ யூரியா, நானோ டி.ஏ.பி., நானோ காப்பர், நானோ ஜிங்க் மற்றும் சாகரிகா தயாரிப்புகள், நீரில் கரையும் உரங்கள், நேச்சுரல் பொட்டாஷ், உயிர் உரங்கள் ஆகியவற்றின் பயன்பாடுகள் மற்றும் நன்மைகள் குறித்தும், இப்கோ உர விற்பனை முகவராகச் செயல்படுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும், மண்வளத்தை மேம்படுத்துதல், உரப்பயன்பாட்டுத் திறனை அதிகரித்தல், பயிர்களின் வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் மகசூலை அதிகரித்தல் ஆகியவற்றில் நானோ உரங்களின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கினார்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

**PRODUCT RANGES**

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# அரிசி ஆலையைப் பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்!




திருவாரூர், அக்.14

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டாரம், மூங்கில் குடி கிராமத்தில் செயல்படுத்தப் பட்டு வரும் ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) ஒரு பகுதியாக, கீழ்வேளூர் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த இறுதியாண்டு வேளாண் மாணவர்கள் அப்துல்லா, ஆகாஷ், பாலாஜி, இனிய அஸ்வின் ஜெயசூர்யா, பெய்ஸல் செப்பர்டு, பிரித்திவிராஜ், சந்தோஷ், சத்திய சீலன், சுதர்சன், வினோத் குமார் ஆகியோர் அரிசி ஆலை பார்வை யிட்டனர்.இக்களப்பயணத்தின் போது, நெல்லை அரிசியாக மாற்றுவதற்காக மேற்கொள்ளப்படும் பல்வேறு உற்பத்தி நடைமுறைகள் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. நெல்லை உலர்த்துதல், உமி நீக்குதல், அரிசியைத் தீட்டுதல், தரம் பிரித்தல் மற்றும் மூட்டைகளில் நிரப்புதல் போன்ற அரவைச் செயல் முறைகள் மாணவர்களுக்கு எடுத்துரைக்கப் பட்டது.

அரிசி ஆலையில் பயன்படுத்தப்படும் இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்தும், நெல் அரவையின்போது கிடைக்கும் உமி, தவிடு மற்றும் உடைந்த அரிசி போன்ற உபபொருட்களின் பயன்பாடுகள் குறித்தும் விளக்கங்கள் வழங்கப்பட்டது. மேலும், தரக் கட்டுப்பாட்டு முறைகள், அரிசியைச் சேமிக்கும் நடைமுறைகள் மற்றும் வேளாண் உற்பத்திப் பொருட்களின் மதிப்புக் கூட்டுதல் தொடர்பான தகவல்களும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இக்களப்பயணத்தின் மூலம், அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள், நெல் பதப்படுத்துதல் மற்றும் அரிசி உற்பத்தி நடைமுறைகள் குறித்த நடைமுறை அறிவு மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது. வேளாண் உற்பத்திப் பொருட்களை மதிப்புக் கூட்டுவதன் மூலம் விவசாயிகளுக்கும் வேளாண் தொழில் முனைவோருக்கும் உருவாகும் பொருளாதார வாய்ப்புகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# ரைஸ் மில்லில் விவசாயக் கல்லூரி மாணவர்களின் களப்பயிற்சி : நவீன தொழில்நுட்பங்கள் குறித்து நேரில் விளக்கம்!



திருவாரூர், அக்.14

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன மாணவிகள் தங்களது கிராமப்புற வேளாண்மை அனுபவப் பயிற்சியின் (RAWE) 5-ஆம் நாள் நிகழ்வாக திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டாரத்தில் உள்ள சேரான்குளத்தில் இயங்கி வரும் பிரபல ஸ்ரீ விஷ்ணு & கோ (Sri Vishnu & Co) அரிசி ஆலைக்குக் களப்பயணம் மேற்கொண்டனர்.

இமயம், தலைமை நிர்வாக அதிகாரியாகவும் (CEO) மேலாண் இயக்குநராகவும் (MD) கொண்டு கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக வெற்றிகரமாகச் செயல்பட்டு வரும் இந்த நவீன அரிசி ஆலையின் செயல்பாடுகள் குறித்து மாணவிகள் நேரில் சென்று அறிந்து கொண்டனர்.

களப்பயிற்சியின் போது, ஆலையின் மூத்த பணியாளர்களான கொதிகலன் மற்றும் டர்பைன் இயக்குநர்கள் (Boiler and Turbine Operators) குணசீலன் மற்றும் பிரகாஷ் ஆகியோர், ஆலை இயங்கும் முறைகள் மற்றும் கொள்கைகளைத் தெளிவாக விளக்கினர். அரிசி ஆலையி லிருந்து வெளியேறும் உமியையே (Husk) எரிபொருளாகப் பயன்படுத்தி, டர்பைன் (Turbine) மூலம் ஆலைக்குத் தேவையான மின்சாரத்தைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்ளும் சுயமின் உற்பத்தி' (Captive Power Plant) தொழில்நுட்பம் குறித்து விரிவாக விளக்கமளித்தனர்.

மேலும், ஆலையின் ஊழியர் விமல், நெல்லை நீராவியில் வேக வைத்து (Steaming & Boiling), உமியை நீக்கி, நவீன

வண்ணப் பிரிப்பான் (Colour Sorting Machine) மூலம் தரமான அரிசியைப் பிரித்தெடுத்து பேக்கிங் செய்யும் முழுமையான செயல்முறைகளையும் மாணவர்களுக்கு நேரில் சுற்றிக்காட்டி விளக்கினார்.

வேளாண் படிப்பின் ஒரு பகுதியாக நடைபெற்ற இக்களப் பயிற்சியின் மூலம் அரிசி ஆலை மேலாண்மை, கழிவுப் பொருட்களிலிருந்து ஆற்றல் தயாரித்தல் மற்றும் நவீன அரிசி பதப்படுத்தும் தொழில்நுட்பங்கள் குறித்துப் பல புதிய தகவல் களைக் கற்றுக் கொண்டதாகப் பயிற்சி பெற்ற மாணவிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

